
வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
கண்ட பத்து
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.

# வேதாத்திரியப் பார்வையில்

# திருவாசகத்தின் கண்ட பத்து

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

## இதனுள்ளே

1. சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி
2. பிறவாமை தந்த இறைவன்
3. உள்ளம் பெருங்கோயில்
4. ஞானம் பெற என்ன செய்ய வேண்டும்?
5. சாதிகுலம் பிறப்பென்னும்
6. பிறப்பென்னும் பேதைமை நீங்க
7. சித்தமெனும் திண்கயிற்றால்
8. **கடவுளைக் காண முடியுமா?**
9. அகத்தவப் பயன்கள்
10. ஐம்புல அறிவு

## 1.சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி

கங்கை நதி பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. அதில் ஒரு படகு. படகில் ஓடக்காரனும் சில பயணிகளும். பயணிகளுள் ஓர் அரைகுறை பண்டிதர்.

தான் படித்ததைப் பிறருக்குப் போதித்தாலே அவர் இன்னும் பலவற்றைக் கற்றிருக்க முடியும்.

ஆனால் கற்று விட்டோம் என்ற கர்வம் அவரை அதிகம் அலட்டிக்க வைத்தது. அவர் ஓடக்காரனிடம் தனது அறிவை பறைசாற்றத் தொடங்கினார்.

‘ஏய் ஓடக்காரா, இப்படி நீ தற்குறியாக இருக்கிறாயே? பகவத்கீதையை நீ படித்திருக்கிறாயா? என்று ஏளனமாக கேட்டார்’ .

‘ஐயா, சாமி என் அப்பன் கூட அதை படித்ததில்லையே?’ என்றான் ஓடக்காரன்.

‘உனது வாழ் நாளில் கால் பங்கு மோசமாக போச்சு’ என பண்டிதர் சாபம் தருவது போல் சொன்னார்.

‘சரி திருக்குறளாவது படித்திருக்கிறாயா?’ என கேட்டார். அதற்கு ஓடக்காரன் ‘அதை நான் தொட்டது கூடகிடையாதே, சாமி’ என்றான்.

‘தண்டமே இரண்டு பங்கு உன் வாழ்க்கையை வீணாக்கி விட்டாயே, போகட்டும் பாகவதமாவது வாசித்திருக்கிறாயா’ ? என்றார். சிரமத்துடன் படகு செலுத்திக் கொண்டிருந்த ஓடக்காரன் தலை குனிந்து நின்றான்.

‘அதுவும் இல்லையா? உன் வாழ்க்கையில் முக்கால்வாசி நஷ்டமாகி விட்டது. இனி நீ என்ன செய்யப் போகிறாய்? கடவுளுக்குதான் வெளிச்சம்’ என்று பண்டிதர் சொல்லி முடித்தார்.

அப்போது கரை புரளும் வெள்ளம். அலையடித்து படகு கவிழ்ந்து விடும் என்ற நிலையில் நீந்தத் தெரிந்தவர்கள் நதியில் குதித்து நீந்திக் கரையேறினர்.

ஓடக்காரனும், பண்டிதரும் மட்டும் தத்தளிக்கும் படகில் இருந்தனர். ‘குதிங்க சாமி. இல்லேன்னா மூழ்கிடுவீங்க.’ என்று ஓடக்காரன் சொல்ல, ‘ஐயோ, எனக்கு நீச்சல் தெரியாதே...’ என்று பண்டிதர் சொன்னார்.

அந்த அவசரத்திலும் ஓடக்காரன், பண்டிதரிடம், ‘சாமி, எனக்கு கீதை,

பாகவதம் திருக்குறளென்று எதுவும் தெரியாது. ஆனால் நீச்சல் தெரியும். இதெல்லாம் தெரிஞ்ச நீங்க இப்போ முழு வாழ்க்கையையும் இழக்கப் போறீங்களே' என்று கூறி நதியில் குதித்துக் கரை சேர்ந்தான். பலவற்றைக் கற்ற பண்டிதர் பரிதவித்தார்.

இந்தக் கதை பகவான் ராமகிருஷ்ணர் கூறியது. இன்று மனிதர்களுள் பலரும் இப்படித்தானே செய்திகளை சுமக்கும் பொதி மாடுகளாக உள்ளனர்.

உலகைப்பற்றிய, இயற்கைப்பற்றிய, பிறரைப்பற்றிய செய்திகள் ஏராளம் அவர்களுக்குத் தெரியும். அனால் மனிதனுக்கு தன்னைப் பற்றிய அறிவும், ஞானமும் அதிகமில்லை என்பது வருத்தப்பட வேண்டிய ஒன்று.

சிலருக்கு பால் எங்கிருந்து வருகிறது என்று தெரியும். சிலர் பாலைப் பார்த்திருக்கிறார்கள். சிலர் பாலை தொட்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு சிலரே பாலை பருக முடிகிறது.

அது போல சாஸ்திரங்களைச் சிலர் படித்திருக்கிறார்கள். சிலர் மேற்கோள் காட்டுகிறார்கள். ஒரு சிலரே சாஸ்திரம் கூறும் ஞானத்தையும், தெய்வ சக்தியையும் உணர்கிறார்கள். பிறருக்கும் உணர்த்துகிறார்கள்.

ராம கிருஷ்ணர் பக்தர்களுக்கும், துறவிகளுக்கும் கூறும் போது முதலில் கடவுள். பிறகு உலகம். இந்த வகையில் தான் மனிதனின் கற்றலும், கவனமும் இருக்க வேண்டும் என்கிறார்.

அவ்வாறே அவர் வாழ்ந்தும் காட்டினார். லோக மாதாவைத் தரிசிப்பதிலும், தெய்வ ஞானத்தை பெறுவதற்கும் தமது ஆரம்ப கால வாழ்க்கையின் 12 ஆண்டுகளை செலவிட்டார்.

இறைவனிடத்தில் தன்னை முற்றிலுமாக கரைத்துக் கொண்டதால் ஊரார் ராமகிருஷ்ணரை பைத்தியம் என்றும், பித்தர் என்றும் ஏளனம் செய்தனர்.

அப்போது அவர் சுவாமி விவேகானந்தர் போன்ற தமது சீடர்களிடம் புன்னகையுடன் ‘உலக மக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தில் பைத்தியமாக இருக்கிறார்கள்.

சிலர் பணத்தின் மீது, சிலர் உடல் இன்பத்தின் மீது, வேறு சிலர் பெயர், புகழ் மீது பைத்தியமாக இருக்கிறார்கள்.

நான் இறைவன் மீது பைத்தியமாக இருக்கிறேன். இந்த எல்லா பைத்தியங்களுள் எது சிறந்த பைத்தியம்... சொல்லுங்கள்? என்று கேட்டு அவர்களை சிந்திக்க வைப்பார். சிரிக்க வைப்பார்.

இறைவனை பற்றிய ஞானம் அதி முக்கியமானது. எதைப் பெற்றால் எல்லாம் பெற்றதற்குச் சமமோ அந்த அறிவைப் பெறுவதில் தான் ராமகிருஷ்ணரின் ஆர்வம் இருந்தது.

எந்த அறிவையும் பெறாமல் வாழ்வில் சொத்து, சுகம் என்று ஏனைய அனைத்தும் பெற்றிருந்தும் மனிதன் நிறைவான நிலையையும், நிம்மதியையும் அடைய முடியாதோ, அதில் ராமகிருஷ்ணர் கூடுதல் கவனம் காட்டச் சொல்கிறார்.

“இந்திரிய வயம் மயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே.” (பா.475)

- ஐம்பொறிகளின் வசப்பட்டு. அறிவு மயங்கி,
- அதுவே இறப்புக்குக் காரணமாய் அமைய,
- பின்னர் இறந்து. ஆகாயத்தில் சுற்றித் திரிந்து,

- மீளமுடியாத நரகத்தில் விழ இருந்த,
- என் அறிவில் தெளிவை உண்டுபண்ணி,
- என்னை சிவமாம் தன்மை அடையுமாறு செய்து ஆட்கொண்ட,
- பேரின்ப மயமானவனை,
- அழகிய தில்லை அம்பலத்தில் கண்டேன்.

### அறிவின் முழுமை நிலை – வேதாத்திரியம்

“அறிவு உடலில்உயிரில் புலன்கள் மூலம்
அனுபவத்தால் வளர்ந்து, அகத்தவம் ஆய்வாற்றி,
அறிவு உயர்ந்தகன்று. “மெய் பொருள்” நான் என்று
அனுபவமாய் உயர்ந்தமைதி பெற்ற காலை,
அறிவு அகத்ததுவாயும், ஆதிவெளி நிலையாயும்
அதனின்நுண் சுழல் அணவாய் இயங்கும் உண்மை
அறிவு உணர்ந்துணர்ந்து, பிரபஞ்சம் தன்னுள்
அடங்கி இயங்கல் அறிய, நிறை பேறாகும்.”

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 2.பிறவாமை தந்த இறைவன்

ஜென் ஞானி ஒருவரின் மனைவி இறந்து விட்டார்.
துக்கம் விசாரிக்க ஊரே திரண்டு வந்திருந்தது.

எல்லோர் முகத்திலும் வருத்தம்,கண்ணீர்.
ஆனால் ஞானியோ கைகளால் தாளம் போட்டபடி
பாடிக் கொண்டிருந்தார், சர்வசாதாரணமாக!
வந்தவர்களுக்கு அதிர்ச்சி.

ஒருவன் துணிந்து கேட்டான்,

''குருவே, நீங்களே இப்படி செய்யலாமா? என்ன இருந்தாலும் இவ்வளவு காலம் உங்களுடன் வாழ்ந்த உங்கள் மனைவி இறந்திருக்கும் போது, நீங்கள் கவலையின்றி பாடிக் கொண்டிருக்கிறீர்களே?''..

ஞானி சொன்னார்,

''பிறப்பில் சிரிக்கவோ, இறப்பில் அழுவதற்கோ
என்ன இருக்கிறது?

பிறப்பும் இறப்பும் நம் கையில் இல்லை.

என் மனைவிக்கு முன்பு உடலோ,உயிரோ இல்லை.

பிறகு உயிரும் உடலும் வந்தன.

இப்போது இரண்டும் போய்விட்டன.

இடையில் வந்தவை இடையில் போயின

இதில் வருத்தப்படுவதற்கு என்ன இருக்கிறது?''..என்றார்.

பிறப்பு ஒன்று இருந்தால் அதனுடன் இறப்பு
ஒன்றும் இருக்கிறது.

பிறப்பும், இறப்பும் வாழ்க்கையின் இரண்டு பக்கங்கள்.

பிறப்பு எப்படி இன்றியமையாததோ
அது போல் தான் இறப்பும்.

பிறப்பு மகிழ்ச்சியை கொடுக்கிறது..

இறப்பு துக்கத்தைக் கொடுக்கிறது.

மனிதன் எத்தனை காலங்கள் வாழ்ந்தான்
என்பது முக்கியமில்லை

அவன் எப்படி வாழ்ந்தான் என்பது தான் முக்கியம்.

இதை அறிந்து வளமாக வாழலாம்..

"வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறுதும் நினையாதே தளர்வு எய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டு என் பிறப்பு அறுத்த இணைஇலியை
அனைத்து உலகும் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே." (பா.476)

- வினையாக வரும் பிறவி என்னும் துன்பத்துள் சிக்கி,
- இறைவனை ஒரு சிறிதளவும் நினைக்காது,
- சோர்வுற்று இருந்த என்னைப் பெரிய அளவில் ஆட்கொண்டு, பிறப்பை அறுத்த ஒப்பற்றவனை,
- எல்லா உலகங்களும் வணங்கும் தில்லை அம்மபலத்தில் கண்டேன்.

## பிறப்பு இறப்பு எனும் கடலை நீந்த - வேதாத்திரியம்

"பிறப்பு இறப்பு எனும் கடலை நீந்தவென்றால்,
பெருவிழிப்பாய் இருவழியில் வெற்றி வேண்டும்.
பிறப்புஎழாமல் பதிதாய்க் குருவின் மூலம்
பேணிப் பாலுறவு அறவே தடுக்க வேண்டும்.
பிறப்பதனைப் பெருக்குகின்ற தன்முனைப்பு,
பெரும்பாவப் பதிவுகளும் பற்றும் போக்கி,
பிறப்பறுக்கும் அகத்தவமும் அறமும் ஆற்றி,
பேரறிவாய் அறிவறிந்து நிலைக்க வேண்டும்" (ஞாக.பா.1314)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 3. உள்ளம் பெருங்கோயில்

கோயிலுக்குச் செல்கிறபோது இறைவனின் அருளை வேண்டுகிறோம். அங்குள்ள சிற்பங்களின் அழகில் மயங்குகிறோம்.

ஆனால் ஆலய அமைப்பு முறையில் ஓர் அற்புதமான தத்துவம் இருப்பதை எல்லோரும் அறிவதில்லை.

கடவுளை மட்டுமல்ல, அவன் உறையும் கோயிலைக் கூட மனிதனைப் போலவே அமைத்திருக்கிறார்கள் முன்னோர்கள்

. .

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுக்கு வாய் கோபுர வாயில்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே'

என்பது திருமூலர் அருட்பாடல்.

அவர் உடலே கோயில் என்றார். உடம்பே கோயிலாய் எழுந்துள்ளது என்பதை, க்ஷேத்திரம் சரீரப் பிரஸ்தாரம்' என்கிறது ஆகமச் சொற்றொடர்.

உடம்பில் பாதங்கள் கோபுரமாகவும், முழங்கால் ஆஸ்தான மண்டபமாகவும், தொடை நிருத்த மண்டபமாகவும், கொப்பூழ் (தொப்புள்) பலி பீடமாகவும், மார்பு மகா மண்டபமாகவும், கழுத்து அர்த்த மண்டபமாகவும், சிரம் (தலை) கருவறையாகவும் கோயிலாய் எழுந்துள்ளது என்பது ஆகம மரபு.

கோயில் அமைப்பில், உடலில் அன்னமய கோசம், பிரணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்த மய கோசம் ஆகிய ஐந்து உள்ளது போல கோயிலில் ஐந்து பிரகாரங்கள் உள்ளன.

தூல சரீரம், சூட்சும சரீரம், குண சரீரம், அஞ்சுக சரீரம், காரண சரீரம் போல ஐந்து சபைகள் உள்ளன.

உடலில் உள்ள மூலாதாரம் முதலான ஆறு ஆதாரங்கள் போலக் கருவறை, அர்த்த மண்டபம் முதலான ஆறு நிலைகள் உள்ளன.

இதைத்தான் இறைவன் தன் உடலிலும் உள்ளத்திலும் உறைந்துள்ளான் என்பதை திருவாசகமும் சொல்லுகிறது.

“உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்து என் உளம்மன்னிக்
கருத்து இருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள் தில்லை கண்டேனே”
(பா.477)

- இறைவனது வடிவத்தை நான் அறியாதபோதே,
- அவன் என் உள்ளத்திலும் உடம்பிலும் புகுந்து தங்கி.
- அங்கேயே நிலைத்து இருந்து,
- தன் பேரருள் திறத்தால் ஆட்கொண்டான்.
- அவன் திருத்துருத்தி என்னும் தலத்தில் எழுந்தருளி இருப்பவன்.
- இன்பம் தரும் மங்கலமானவன்.
- அவனது திருவடியை நாய் போன்ற கடையனேன், ஆசை மிகுதியால் தில்லை அம்மபலத்தில் கண்டேன்.

## ஞானத்தைத்தான் போதிப்பது மனவளக்கலை

மனிதன் இன்பமான வாழ்க்கையை விரும்புகிறான். உயிர் இன்ப துன்பத்தை அனுபவித்தாலும், இந்த உடலைக் கருவியாகக்

கொண்டே அனுபவிக்கிறது.

ஆரோக்கியத்துடன் இருந்தால்தான் வாழ்வில் இன்பம் நிலவும். உடல் நலம் குன்றினால் துன்பமே வந்து சேரும். நோயின் தாக்கம் அதிகம கும் போது எதிர்கால வாழ்வையே பாதித்துவிடும். பிறப்பின் நோக்கத்தையே கெடுத்துவிடும்.

இதையே திருமூலர்

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்கிறார்.

உடல் நோய்வாய்ப்பட்டால், உடலைப் பாதிப்பதோடு கடமைகளையும், செயல் திறத்தையும் பாதிக்கிறது. நம் சமுதாயப் பணிகளையும் கெடுத்து விடுகிறது.

உடலுக்கும் உயிருக்கும் இடையே ஏற்படும் பிணக்கு நோய். உடலும் உயிரும் இணைந்து சென்றால் வாழ்க்கை. உடலுக்கும் உயிருக்கும் பிரிவு ஏற்பட்டால் மரணம்.

மனிதப் பிறவியின் நோக்கமே தன்னை முழுமையாக உணர்ந்து, இயற்கை இன்பங்களை அளவுடன் துய்த்து, அறிவிலே முழுமைப் பெற்று தனக்கும் பிறருக்கும் துன்பம் தராமல் வாழ்ந்து இறைநிலை அடைவது.

இந்த ஞானத்தைத்தான் போதிப்பது மனவளக்கலை.

ஐந்தறிவு விலங்குகளுக்கு வாழ்வின் நோக்கம் கிடையாது. இயற்கையில் நடக்கும் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் ஆகிய ஐந்து நிகழ்ச்சிகளை மட்டுமே உணர்கின்றன. அவற்றைச் சார்ந்தே வாழ்ந்து மடிகின்றன.

ஆனால் மனிதனுக்கு மட்டுமே ஆறறிவு உள்ளது. ஆறாவது அறிவாகிய அனுமான அறிவின் பயன் என்ன வென்றால், ஐந்து நிகழ்ச்சிகளை உணர்வதோடு மட்டுமல்லாது, இந் நிகழ்ச்சிகள் ஏன்? எவ்வாறு நடைபெறுகின்றன? மூலம் எது? என மனிதனால் அறிய முடிவதுதான்.

இப்பிரபஞ்சத் தோற்றங்கள் அனைத்திற்கும் காரணப் பொருளாக உள்ளது இறைநிலை எனும் சுத்தவெளியே.

அது அமைத்துள்ள தன்மாற்றத்தின் உச்சநிலையே நாம். எனவே இந்த சுத்தவெளியின் தன்மையை உணர்ந்து, தூய்மை பெற்று அதுவாதலே முழுமைப்பேறு. மீண்டும் நமது மூல நிலையை அடைதலே வீடுபேறு ஆகும்.

இதனையே வேதாத்திரியம்

“பிறவியின் நோக்கம் அறிந்தபோது அடைந்த பேரின்பத்தை எவ்வாறு உரைக்க முடியும்” என்கிறது.

அது அவரவர்களே உணர்ந்து அனுபவிக்க வேண்டிய ஒன்றாகும். அதை முடிவாக அடைந்தால் அது எவ்வாறு இருக்கும் என்று நினைத்துப் பார்ப்பதாகும்.

அப்போது அறிவு அடையும் விடுதலை பேரானந்தம். சுருங்கச் சொல்ல வேண்டுமானால், மனிதன் இறை உணர்வு பெற வேண்டும்.

இறை உணர்வு பெறுவது என்பது இதுவரை கடினமானதாகவும், அஞ்சத்தக்கதாகவும் இருந்து வந்தது.

வேதாத்திரி மகரிஷி அவர்கள்
இவ்வுணர்வைப் பெறுவது எப்படி என்று எளிமையாகக் கூறியுள்ளார்கள்.

பிறவியின் நோக்கத்தை அறிந்தபோதும்
பின் அந்த் எல்லையினை அடைவதற்கு
அறநெறி விழிப்போடு பொறுப்புணர்ந்து

ஆற்றி மனம், செயல், தூய்மை ஆனபோதும்
உறவுகளிடம் உண்மை நிலைஉணர்ந்து ஆற்றி
உயர்வான துறவுநிலை உணர்ந்தபோதும்
துறவுநிலை முடிவாக பெற்றபோதும்
துய்த்த பேரின்பம் எவ்வாறு உரைப்பேன்" (வேதாத்திரியம்)

முழுமைப்பேறு அடைய வேண்டுமெனில் நமது ஆன்ம களங்கங்கள் கழிக்கப்பட வேண்டும்.

அதற்கு இறைநிலை மாறாத நிலையில் இருந்து கொண்டு அறச் செயல்கள் செய்தல் ஒன்றே வழியாகும். அறநெறியில் தானும் வாழ்ந்து பிறருக்கும் நன்மை செய்ய வேண்டுமெனில் நல்ல உடல் நலம் தேவை.

உடல் நலம் காக்காது விட்டுவிட்டால் வாழ்வில் அமைதியும் இனிமையும் இருக்காது.

வாழ்வின் நோக்கத்தையும் அடைய முடியாது. எனவே ஒவ்வொருவரும் உடல் நலம் காத்தல் அவசியம். வாழ்க வளமுடன்.

## 4.ஞானம் பெற என்ன செய்ய வேண்டும்?

புகழ்பெற்ற ஞானி ஒருவர் இருந்தார். அவர் பெயர், இக்கியு. கண் மூடி தியானத்தில் இருந்த அவரிடம் ஒருவர் வந்தார்.

'சுவாமி! சுருக்கமான ஞான மொழி ஒன்றைக் கூறுங்கள் என்றார்.

உடனே ஞானி, 'பார்! என்ற சொல்லை மட்டும் ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுத்தார்.

ஞான மொழியைத் தேடி வந்தவருக்கு ஏமாற்றம். 'என்ன சுவாமி! இவ்வளவுதானா? இன்னும் ஏதாவது எழுதிச் சேர்க்கலாமா? என்று கேட்டார்.

ஞானி மீண்டும் அந்த காகிதத்தை வாங்கி, 'பார், பார் என்று இரு

முறை எழுதிக் கொடுத்தார்.

வந்தவருக்கு பெரிய ஏமாற்றம். ‘சுவாமி! இதில் விசேஷம் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இதற்கு என்ன அர்த்தம் சுவாமி?’ என்றார்.

ஞானியோ, ‘பார்!’ என்று சொல்லி விட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்.

‘பார்த்தல்’ என்பது ஜென் மதத்தின் மையம். எது ஒன்றுக்கும், முன்னே, பின்னே, உள்ளே, வெளியே என்று பல கோணங்கள் உண்டு. அதை உன்னிப்பாக கவனிக்க வேண்டும் என்பதே இதன் பொருள்.

அரசன் ஒருவனுக்கு ஞானம் பெற வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அவன் உடனடியாக குருமார்களைத் தேடி அலையத் தொடங்கினான்.

அதில் அவனுக்கு மனநிறைவு ஏற்படவில்லை. ஒரு நாள் தனது குதிரையில் மனம் போன போக்கில் சுற்றத் தொடங்கினான். ஒரு மலைக் குகையில் மெய்ஞான குரு ஒருவரைச் சந்தித்தான்.

குருவை வணங்கிய மன்னன், அவர் முன்பாக அமர்ந்தான். ஆனால் குருவோ கண் மூடி தியானத்தில் ஆழ்ந்திருந்தார்.

அவர் கண் விழிப்பார் என்று காத்திருந்த மன்னனுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. பல மணி நேரம் கடந்தும், ஞானி கண் திறக்கவில்லை.

இறுதியாக தானே பேசி விடுவது என்று முடிவு செய்து, ‘சுவாமி! நான் ஞானத்தை அடைய வேண்டும். புத்தர் போல் ஆக வேண்டும்’ என்று தனது கோரிக்கையை முன் வைத்தான்.

குரு கண் விழித்தார்.

அரசன் ஏறி வந்த குதிரையை உற்றுப் பார்த்தார். பிறகு,

‘குதிரையைத் தேடாமல், எதற்காக ஞானத்தைத் தேடி வந்தாய்?’ என்று கேட்டார்.

மன்னனுக்கு குழப்பம், ‘சுவாமி! என்னிடம் குதிரை இருக்கிறது? அதோ பாருங்கள்’ என்று குதிரையைச் சுட்டிக்காட்டினான்.

குரு லேசாக புன்னகைத்தபடி, ‘நீ ஏன் குதிரையைத் தேடிப் பிடிக்கக் கூடாது?’ என்றார்.

மன்னனுக்கு கடுமையான கோபம் வந்தது. ‘என்ன சுவாமி! விளையாடுகிறீர்களா? என்னிடம் தான் குதிரை இருக்கிறதே! அதில்தானே ஏறி வந்தேன். பிறகு எதற்காக நான் மறுபடியும் குதிரையை தேட வேண்டும்’ என்றான்.

சிறிது நேரம் சிரித்தபடியே இருந்தவர், பிறகு எழுந்து குகைக்குள் சென்று விட்டார்.

ஞானியின் உபதேசம் முடிந்து விட்டது.

அதாவது தன்னிடம் இருக்கும் குதிரையை எப்படி, மன்னனால் தேட முடியாதோ, அதே போல்தான் ஒவ்வொரு மனிதனுமே புத்தனாக, ஞானம் உடையவனாக இருக்கும்போது, வெளியில் போய் ஞானத்தையும் தேட முடியாது. அவனுக்குள்தான் தேடிக்கொள்ள வேண்டும்.

“கல்லாத புல்லறிவில் கடைப்பட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து வனப்பெய்தி இருக்கும் வண்ணம்
பல்லோரும் காண என்றன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே.” 478

- ஞானம் இல்லாத கீழான அறிவுடைய கடைப்பட்ட நாய் போல் இருந்த என்னை,
- அறிவுத் திறமை உடையவனாய் வந்து,
- பலரும் காணுமாறு,

- என்னுடைய பாசத்தையும், பசுத் தன்மையையையும் களைந்து,
- அழகு எய்தி இருக்கும்படி செய்தவனை,
- எல்லோரும் வணங்கும் அழகிய தில்லை அம்பலத்தில் கண்டேன்.

## ஞானம் என்றால் – வேதாத்திரியம்

"ஞானம் என்றால் மனஇயக்க இயல்பறிந்து,
நான்என்ற இயற்கைத் தத்துவம் உணர்ந்து,
மோனமென்ற ஒன்றாயும், மோகமாதி
மூவிரண்டு குணங்களாய்ப் பரிணா மத்தால்
ஆனபொருள் அனைத்திலும், தான் அறிந்து நிற்கும்
அளவாயும்அமையும் அறிவெல்லை கண்டு
மானம், மரியாதை, உடல் ஒழுக்கம் காத்து,
மனிதரிடை மனிதராய் வாழ்தல் ஆகும்."
(ஞாக.பா.1387)

வேதாத்திரிய திருவாசக சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 5. சாதிகுலம் பிறப்பென்னும்

மனிதர்களிடையே காணப்படும் பாகுபாடு வேற்றுமையை வளர்க்கின்ற சாதி, இன வேற்றுமையை இயேசு, நபிகள், புத்தர், மாணிக்கவாசகர், இராமானுஜர், சித்தர்கள், வள்ளலார், தாயுமானவர், முதலான ஆன்றோர்கள் பலர் முயன்றுள்ளனர்.

இந்த வரிசையில் மாணிக்கவாசகரின் சாதி சிந்தனைகள் சற்று வித்தியாசமானதாக அமைந்துள்ளது.

ஆனால், வேதாத்திரி ம கி ர ஷியோ சாதி ஒழிய தேவையானத் திட்டங்களை முன்மொழிந்து புதிய வரலாற்றினைப் படைத்துள்ளார்.

“சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லல் அறுத்து ஆட்கொண்டு
பேதைகுணம் பிறர் உருவம் யான்எனது என்னும் உரைமாய்த்துக்
கோதில்அமுது ஆனானைக் குலாவுதில்லை கண்டேனே.” 479

- சாதி, குலம், குடி என்னும் சுழலில் சிக்கி,
- ஆதரவு இன்றி நிலை குலைந்து இருந்த என்னை ஆட்கொண்டு,
- துன்பம் தரும் பிறவியை அறுத்து.
- அறியாமை, பிறரது உருவம், “யான், எனது” என்னும் அகப்புறப் பற்றுக்கள் என்று எல்லாவற்றையும் அழித்து ஒழித்த,
- குற்றமற்ற அமுதம் போன்றவனை,
- விளங்குகின்ற தில்லை அம்பலத்தில் கண்டேன்.

## சாதி ஒழிய – வேதாத்திரியம்

“கருவான நாத விந்தில் ஜாதியேது?
கற்பனையால் நாம்மிரண்டு பேசுகின்றோம்.
வருநாளில் கல்வியோடு பொருளாதாரம்
வளர்ச்சிபெற்றால் ஜாதியெலாம் ஒழிந்திடாவோ?” (ஞாக.பா.588)

## வேதாத்திரி மகரிசியின் சாதீய ஒழிப்பிற்கான தீர்வுகள்

சாதியைப் பொறுத்தவரையில் மகரிஷியின் பார்வை வித்தியாசமானது. நிரந்தரத் தீர்வை அளிக்க வல்லது.

இயற்கையானது மனிதன் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் அளிக்கவல்ல ஒரு கருவூலம்.

வாழ்க்கைக்கு வேண்டிய பொருளைப் பொதுவுடைமை ஆக்குவதால் உலகில் ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு தோன்றாது.

அனைவரும் பொருளாதார நிறைவு பெற்று பொதுத் தொண்டில் ஈடுபடுவர்.

பொருட்களையும். வாய்ப்பு நலங்களையும் ஏற்படுத்திக் கொள்வதற்காக ஒவ்வொருவருக்கும் கட்டாயம் கல்வியைக் கற்பித்து கற்றவர்களாக்க வேண்டும்.

பின்னர் தொழில் நுட்ப அறிவிலும் பயிற்சி அளிக்க வேண்டும்.

தவிர்க்க முடியாத தேவைகளை இயற்கை தோற்றுவித்தால் ஒழிய, ஒரு மனிதன் பிறரின் உழைப்பையும், பணத்தையும் சுரண்டிப் பிழைத்து வாழக்கூடாது என்கிறார் வேதாத்திரியார்.

சமுதாயத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் சொத்தைச் சமமாக பங்கிட வேண்டும் என்று பொது உடமை தத்ததுவவாதிகள் எண்ணுவதற்குப் பதிலாக ஒவ்வொரு தனிமனிதனும் அவனைச் சமுதாயத்தின் சொத்தாக கருத வேண்டும் என்கிறார் மகரிஷி.

"செல்வர்களே ஆட்சியினை ஆளும் மட்டும்
சீர்திருத்தம் பொருள் துறை யில் மலர மாட்டா
செல்வர்களோ டேழைகளும் கலந்து ஆள
செழித்துவரும் நாடு பொருள் மிகுதியாகும்
செல்வர்களின் அடிமைகளாய் அழைப்போர் வாழும்
சீர்கேடு மாறிவிடும் சுரண்டல்போகும்
செல்வமிலார் என்ற ஒரு தனித்த சாதி
சில நாளில் மறைந்து விடும் சமமே எல்லாம்." (ஞா.க.186)

செல்வமும் ஆதிக்கமும் வளர்ந்தபின் சாதியமைப்பில் இப் புல்லுருவிகள் சேருகின்றனர். இதனால் இயல்பாய் இயங்கும் சாதியம், சிக்கலாய் மாறி மானுட நேயத்தைச் செயலிழக்கச் செய்கின்றன.

தனியார் சொத்து தளர வேண்டுமாயின் சமூகம் பொருள் உற்பத்தியைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்தல் இன்றியமையாதது. இச்சாதி பேதங்கள் மறைய,

“குலமுதலாய் பேதங்கள் கொள்ளும் நிலைமாற்றி
பலரும்கூடி உழைத்து. பகிர்ந்துண்டு வாழ்ந்திடுவோம்.
உலகில் பிறந்துவிட்ட ஒவ்வொர் மனிதனுக்கும்
நிலஉலகம் சொந்தம் என்ற நீதிநிலை நாட்டிடுவோம்.” (ஞா.க.357)

என்கிறார்.

சாதி ஒழிப்பிற்கு பாரதியார், அம்பேத்கார் போன்றவர்கள் சமூக அணுகு முறையில் பேராடினார்கள். அதனால் ஓரளவிற்குத்தான் பயன் கிடைத்தது.

முழுமையான பயன் கிடைக்க வேண்டுமானால் வேதாத்திரி மகரிஷி குறிப்பிடுகின்ற பற்றற்ற குடும்ப, சமூக வாழ்க்கையை நடைமுறையில் கொண்டுவர வேண்டும். இந்த சீரிய கருத்தே சாதி ஒழிப்பிற்கு மகரிஷி வைக்கும் உயர்ந்த திட் டாகு ம்.

“இனம் சாதி தேசம் மொழி மதம் பற்றற்று
இயற்கை யமைப் பறிவு நிலையறிந்து மேலாம்
மனிதனென்ற ஒரு நினைவில் பாசம் பற்றை
மறந்து தொண்டாற்றி பிறர் துன்பம் தீர்க்கும்
புனித உள்ளம் செயலுடையோர் எண்ணிறந்தோர்
புவிமீது அதிகரிக்க அதிகரிக்க
கனிவு மிகும் அருள் பெருகும் சமுதாயத்தின்
களங்கங்கள் மறைந்துவிடும் உலகம் உய்யும் “ (ஞா.க.339)

சாதி ஒழிய வேதாத்திரியத்தின் புதுமைக் கருத்து சொல்கிறார்.

“சமுதாயப். பொருட்கள் உற்பத்தி யேற்று
தக்கபடி நிர்வகித்தால் தனியார் சொத்தேன்?
சமுதாயம் குழந்தை வளர்ப்பதனை ஏற்றால்
தரம் பிரிக்கும் சாதி, பரம்பரைச் சடங்கேன்?
சமுதாயம் தொழில் துறையை நிர்வகிக்கத்
தனியார்க்கு வேலையில்லாத் தொல்லையேது?

சமுதாய வாழ்வின் நலங்கள் குலைக்க ஏற்ற
தரம் குறைந்த பொருள் தோன்ற வாய்ப்பு ஏது? (ஞா.க.303)

இச்சமுதாயமே குழந்தை வளர்ப்பு ஏற்க முன்வருதல் புதுமையான கருத்து. நடைமுறைக்கு வர ஒவ்வாதது அல்ல.

**சாதி என்பது ஒழிக்க முடியாதது அல்ல. அதனை ஒழிக்க ஒரு கருத்தைத் தெரிவித்தல் அதன் செயல்பாட்டிற்குத் திட்டம் வகுத் தல், பயன் பாட்டைத் தெளிவு செய்தல் வேதாத்திரியத்தின் தனிச்சிறப்பாகும்.**

என்று வேதாத்திரிய கவிதை சொல்கிறது. எவ்வளவு சிறப்பான திட்டமானாலும் தனிமனிதன் மட்டும் புரிந்து கொண்டால் போதாது.

அத்திட்டத்தை சமதாயமும் அறிந்து கொண்டால்தான் முழுப் பயனைப் பெற முடியும். பாமரனுக்கும் அதன் பயனை கொண்டு செல்ல இயலும்.

வேதாத்திரிய திருவாசக சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 6.பிறப்பென்னும் பேதைமை நீங்க

பலப்பல பிறவிகளை எடுத்த ஜீவான்மா இறுதியில் இறையருளால் பிறப்பில்லாத நிலையை அடைகிறது. இந்நிலை உண்டு என்பதை வள்ளுவம் ஒப்புக் கொள்கிறது.

பிறவி எண்ணற்றது. கடல் போன்றது. அந்தப் பிறவிப்பெருங்கடலை நீந்திக் கடந்து இனிப் பிறவாத நிலையை அடைய வேண்டுமானால் இறைவன் திருவடியைச் சரணடைய வேண்டும் என வலியுறுத்துகிறார் வள்ளுவப் பெருந்தகை.

‘‘பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்’’ (குறள் எண் 10).

இறைவன் அடிகளை நினைப்பவர் பிறவியாகிய பெரிய கடலை நீந்திக் கடப்பர். இறைவன் அடிகளைச் சேராதவர் பிறவிப் பெருங்கடலைக் கடக்க மாட்டார். மீண்டும் மீண்டும் பிறக்காமலிருக்க என்ன செய்ய வேண்டும் என்பதையும் வள்ளுவம் வலியுறுத்துகிறது.

‘‘வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்.’’
(குறள் எண் 38)

ஒருவன் அறத்தைத் தவறாமல் நாள்தோறும் பின்பற்றுவானேயானால் அது அவன் மீண்டும் பிறக்கும் வழியினை அடைக்கும் கல்லாக அமையும். எனவே பிறவாமையை விரும்புகிறவர்கள் அறநெறியைப் பின்பற்ற வேண்டும்.

‘‘கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவார்
மற்றீண்டு வாரா நெறி.’’ (குறள் எண் 356)

கல்வி கேள்விகளால் மெய்ப்பொருளை உணர்ந்தோர் மீண்டும் இந்த உலகில் பிறந்து துன்பம் அடைவதில்லை. அவர்கள் பிறவாத தன்மையை அடைகிறார்கள்.

‘‘பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு.’’
(குறள் எண் 358)

பிறவித் துன்பத்திற்குக் காரணமான அறியாமை நீங்குமாறு, முக்தி என்று சொல்லப்படும் சிறந்த நிலைக்குக் காரணமான செவ்விய பொருளைக் காண்பதே மெய்யுணர்வு.

‘‘வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது

வேண்டாமை வேண்ட வரும்.’’ (குறள் எண் 362)

ஒருவன் ஒன்றை விரும்புவதானால் அவன் பிறவாத நிலையை விரும்ப வேண்டும். அவா அற்ற நிலையை விரும்பினால் பிறவாத நிலை உண்டாகும்.

இவ்விதம் பல குறட்பாக்களில் இந்த மண்ணுலகில் மீண்டும் பிறவாத நிலையை அடைவதே இறுதி லட்சியம் என்பதை வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

இறைவனைச் சார்ந்து வாழ்வதே அதற்கு வழி என்றும் தெரிவிக்கிறார்.

“பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப்பென்று இவையிரண்டும்
உறவினொடும் ஒழியச்சென் உலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம்பலம் மன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே.” 480

- அதனால் நோய், முதுமை, உறவு என்று இவற்றில் இருந்து என்னை விடுவித்த ஒரு தனி மூலத்தை
- அடர்ந்த சோலைகளால் சூழப்பட்ட தில்லை நகரிலுள்ள சிற்றம்பலத்தில் நிலைத்து இருப்பவனை.
- வேதியர்களும் வான உலகத்தவரு ம வணங்கி நிற்க,
- அப்பொழுது நானும் கண்டேன்.

## பிறவி தொடரும் காரணம் என்ன? வேதாத்திரியம்

“விரும்பிய பல்பொருள்தமை, செயல்கள் தம்மை
வேண்டிய வாறுஉலகில் துய்த்து அமைதிகாணாப்
பெரும்குறையால், புலன்மயக்கில் பழிச்செயல்கள்
பேரழுத்தம், புறமனத்தில் நடுமனத்தில்
சுருங்கியநற் பதிவுகளை அழிக்காப் போக்கால்,
சுகதுக்கச்சூழல் இயக்க உயிர் மூலத்தை

நெருங்கி உணர்ந்துஅதில் இணைய அறிந்திடாத
நிலை, இவற்றால் மனிதஉயிர் பிறவிநீளும்." (ஞாக.பா.1305)

வேதாத்திரிய திருவாசக சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 7. சித்தமெனும் திண்கயிற்றால்

இறைநிலையின் தன்மாற்ற சரித்திரத்தில் கடைசியாக வந்தவன்தான் மனிதன்.

இறைநிலை (Space):
வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் எனும் நான்கு வளங்களையும் உள்ளடக்கியது இறைநிலை.

இறைத்துகள் (Formative Dust)
இறைநிலைக்கு தன்னிறுக்க சூழ்ந்தழுத்தும் தன்மை உள்ளது. அவ்வாறு தன்னைத்தானே இறுக்கிக் கொள்ளும் போது இறைநிலை நொறுங்கி இறைத் துகள்களாகிறது.

காந்தம்(Magnet):
பிரபஞ்சம் முழுவதும் நிரம்பியுள்ள காந்த அலை தற்சுழற்சி கொண்ட இந்த இறைத்துகள்களே.

விண்
இறைத் துகள்களின் கூட்டே விண்ணாகும்(Energy Particle).

பஞ்ச பூதங்கள்
விண்களின் கூட்டே பஞ்ச பூதங்களாகும்.

உலகம்

பஞ்ச பூதங்களின் கூட்டே , பிரபஞ்சத்தில் உள்ள கோள்களும், விண்மீன்களும், நாம் வாழும் இந்த பூமியும், உயிரற்ற பொருட்களும் ஆகும்.

### உயிரினங்கள்

பஞ்ச பூதங்கள் ஒரு சரியான, இசைவான விகிதத்தில் சேர்ந்த போது அதில் ஓர் இணக்கமான காந்தக் களம் உருவாகியது.

அதில் தனித்து விண்துகள்களே சுற்றோட்டமாக நுழைந்தோடும் தன்மை பெற்று விளங்கியது. இவ்வாறு சடப் பொருள்களில் ஒழுங்கமைப்பு பெற்று ஓடத் தொடங்கியபோது உயிர் எனப்பட்டது. இவ்வாறே சடப்பொருள் உயிர்ப்பொருளாக தன்மாற்றம் பெற்றது.

இறைநிலை இலட்சக்கணக்கான ஆண்டுகளாக தாவரம், புழு, பூச்சி, பறவை, விலங்கு என தன்மாற்றம் அடைந்து பரிணாமத்தில் சிறப்புற்று கடைசியாக எடுத்த உடலே மனிதன்.

இறைநிலையின் பேரறிவால் "அறிவு என்னும் வலிய கயிற்றால் தன் திருவடிகளில் என்னைக் கட்டி வைத்துள்ள திறமை உடையவன்" என்று இறைநிலையின் தன்மையான பேரறிவைப் புகழ்கிறது திருவாசகம் இந்தப் பாடலில்.

"பத்திமையும் பரிசும் இலாப் பசுபாசம் அறுத்துஅருளிப்
பித்தன் இவன் எனஎன்னை ஆக்குவித்துப் பேராமே
சித்தமெனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே." 481

- என்னுடைய பசுத்தன்மையையும் மலக்க கட்டுகளையும் நீக்கி அருள் செய்து,
- அன்பு குணமும் இல்லாத பித்தன் என்று உலகர் என்னைப் பழி தூற்றும்படி செய்து,
- இந்நிலையில் இருந்து நான், மாறுபடாத வகையில்
- அறிவு என்னும் வலிய கயிற்றால் தன் திருவடிகளில் என்னைக் கட்டி வைத்துள்ள திறமை உடையவனின் திருவிளையாடலை,

- விளங்குகின்ற தில்லையில் கண்டேன்

## பேரறிவு – வேதாத்திரியம்

எந்தபொருளிலும் உள்ள இயக்க ஒழுங்கு அதாவது வடிவம். துல்லியம், காலம் இவை மூன்றும் தவறுவதில்லை. இதுவே அறிவு என்னும் தத்துவமாகும்.

இந்த அறிவு இறைநிலையின் இயல்பாக அடங்கியுள்ளது.

இதுவே, இறைநிலையின் தன்மாற்ற விளைவுகளான கோடிக்கணக்கான பொருட்களில் நிகழ்ந்து கொண்டிருக்கும் பேரறிவாக உள்ளது.

## இறைநிலையின் தன்மாற்றம் தான் பிரபஞ்சம்:

“இறைநிலையிலிருந்து பிரபஞ்சம் தோன்றியது என்ற கருத்தே எல்லா வழுக்கல்களுக்கும் காரணம்!.

உண்மையில் இறைநிலையே பிரபஞ்சமாக தன்மாற்றம் (□□□□□□□□□□□□□□) அடைந்து இயங்கிக் கொண்டிருக்கிறது.

இறைநிலை வேறாகவும், பிரபஞ்சப் பொருட்கள் வேறாகவும் இருக்கின்றன என்பதே தவறான கருத்து ஆகும்.

இறைநிலையை சில அடையாளங்களோடு தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

சாதாரணமாக ஐம்புலனறிவோடு இயங்குகின்ற மனிதர்கட்கு இறை நிலையைப் பற்றிய உண்மைகளும், விளக்கங்களும் எளிதில் பிடிபடா.

என்றாலும், ஆறாவது அறிவு நிலையில் முதிர்ச்சியடைந்தவர்கள் அகத்தவப் பயிற்சியினால் இறைநிலையோடு கலந்து அதன் உண்மை நிலைகளை உணர முடியும்; உணர்ந்தும் உள்ளார்கள்.

அந்த அனுபவங்களை அடையாளங்களாகக் காட்டி மற்றுமுள்ள மனித குலத்திற்கு அந்த அருட்பேராற்றலைப் பற்றி விளக்குவது எளிதேயாகும்.

சாதாரணமாக மனிதருக்குள் அறிவு 'ஆராய்ச்சி' நிலையில் சில வழுக்கல்கள் ஏற்படுகின்றன.

இதற்குக் காரணம் அவர்களுக்கு ஆறாவது அறிவு இயங்கவில்லை என்றோ குறைவாக உள்ளது என்றோ கருத்து அன்று.

அறிவின் கூர்மையும் நீடித்த சிந்தனையும் மறைபொருட்களை ஆராய்வதற்கு மிகவும் அவசியம்.

எந்தப் பொருளைப் பற்றி உணர வேண்டுமானாலும் அந்தப் பொருளைவிட நுண்ணிய நிலையில் அறிவு இயங்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

அந்த அளவில் பண்பட்டு பக்குவப்படுவதற்கான முறையான உளப்பயிற்சி அவசியம். அத்தகைய உன்னதமான அகத்தவ பயிற்சி தான் உலக சமுதாய சேவா சங்கத்தின் “குண்டலினி யோகம் (□□□□□□□□□□ □□□□□□□□□ □□□□) ஆகும்”.

வேதாத்திரிய திருவாசக சிந்தனைகளை ஏற்போம்.

ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 8.கடவுளைக் காண முடியுமா?

மலை உச்சியில் அமர்ந்திருந்தார் – **கடவுள்**.

'வெறுங்கையோடு பார்க்கப் போகாதே... ஏதாவது கொண்டு போ' – என்றார்கள்!

குசேலனின் அவல் போல்... இருந்ததை முடிந்து கொண்டு கிளம்பினேன்.

மலைத்து நின்றேன் – மலையடிவாரத்தில்..

ரொம்ப உயரம் இருக்கும் போலவே...ஏற முடியுமா என்னால்?

மலையைச் சுற்றிலும் பலப்பல வழிகள் – மேலே போவதற்கு.

- அமைதியான வழி..
- ஆழ்ந்த தியானத்தின் வழி..
- சாஸ்திர வழி...
- சம்பிரதாய வழி..
- மந்திர வழி..
- தந்திர வழி..
- கட்டண வழி..
- கடின வழி...
- சுலப வழி...
- குறுக்கு வழி..
- துரித வழி...
- சிபாரிசு வழி...
- பொது வழி..
- பழைய வழி..
- புதிய வழி..

•

இன்னும்...இன்னும்...கணக்கிலடங்கா... ஏகப்பட்ட வழிகள்.

அடேங்கப்பா.. என மலைக்க வைக்கும் மலையின் வழிகள்...?

ஒவ்வொன்றிலும் ஒரு வழிகாட்டி..

கண்டுகொள்ளவில்லை சில வழிகாட்டிகள்..

**'என் வழியில் ஏற உனக்குத் தகுதியில்லை'** - ஒதுக்கினர் சிலர்..

**'நான் கூட்டிப் போகிறேன் வா...**

**கட்டணம் கூடத் தேவையில்லை..**

**என் வழியில் ஏறினால் போதும்..**

**எத்தனை பேர் என் வழியில் ஏறினர் என கணக்குக் காட்ட வேண்டும் எனக்கு...'**

என கை பிடித்து இழுத்தனர் சிலர்.

**'மேலே ஏறும் சிரமம் உனக்கு வேண்டாம்**

**உனக்குப்பதில் நான் போகிறேன்..**

**கட்டணம் மட்டும் செலுத்து'**...என சிலர்..

*'பார்க்கணும் அவ்ளோதானே...*

*இங்கேயிருந்து காட்டுகிறேன் பார்..!*

*அது போதும்.....*

*அதெல்லாம் நாங்க மட்டும்தான் ஏறமுடியும்...' உன் மொழி அவருக்குப் புரியாதே.. என்ன செய்வாய்..?'*- என

ஆணவ அதிகாரத்துடன் சிலர்....

**'அங்கேயெல்லாம் உன்னால் போகமுடியாது..**

**உன்னால் ஏறமுடியாது...**

**தூரம் அதிகம்.. திரும்பிப்போ...**

**அவரை என்னத்துக்குப் பார்க்கணும்..**

**பார்த்து ஆகப்போறது என்ன..'**

அதைரியப்படுத்தினர் சிலர் ...

***'உண்மையில் நீ பார்க்கும் தூரம் இல்லை..***

***ஏறினால் ஏறிக்கொண்டே இருக்கவேண்டும்***

***அது ஒரு வழிப்பாதை...***

***ஒரு முறை ஏற ஆரம்பித்தால் திரும்ப முடியாது...அப்படியே போவேண்டியதுதான்...'***

பயமுறுத்தினர் சிலர்...

***'சாமியாவது...பூதமாவது..***

***அது வெறும் கல்..***

***அங்கே ஒன்றும் இல்லை..***

***வெட்டி வேலை...***

***போய் பிழைப்பைப் பார்...'***

பாதையை அடைத்து வைத்துப்

பகுத்தறிவு பேசினர் சிலர் ...

என்ன செய்வது...

ஏறுவதா...

திருப்பிப் போவதா...

குழம்பி நின்ற என்னிடம்

கை நீட்டியது.. ஒரு பசித்த வயிறு..

கடவுளுக்கென்று கொணர்ந்ததை

அந்தக் கையில் வைத்தேன் ..

**“ மவராசனா இரு...! “**

வாழ்த்திய முகத்தினைப் பார்த்தேன்..

நன்றியுடன் எனை நோக்கிய

அந்தப் பூஞ்சடைந்த கண்களிலிருந்து

புன்னகைத்தார்....

**கட வுள் ..!!!!**

ஆம்... கடவுளேதான்..!

உணர்ந்த வியப்பிலிருந்து விலகியபின் கேட்டேன்..

' இங்கென்ன செய்கிறீர்..?'

**“நான் இங்கேதானே இருக்கிறேன்...”**

'அப்போ அங்கிருப்பது யார்..?'

மலை உச்சியை நோக்கிக் கை நீட்டினேன்..

**“ம்ம்ம்...அங்கேயும் இருக்கிறேன்...**

**எங்கேயும் இருப்பவனல்லவா நான்!**

**இங்கே எனைக் காண முடியாதவர்**

**அங்கே வருகிறார்...**

**சிரமப்பட்டு**!!!!...”

'ஆனால்'..திணறினேன்...

'இது உமது உருவமல்லவே...'

* **“அதுவும் எனது உருவமல்லவே...**

**எனக்கென்று தனி உருவமில்லை..**

**நீ என்னை எதில் காண்கிறாயோ**

**அது நானாவேன்...”**

அப்படியென்றால்..??'

**“வாழ்த்திய கண்களில் உனக்குத் தெரிபவனும் நானே....**

**பசித்த வயிற்றோடு கைநீட்டியவன்,**

**உணவளித்த உன் கண்களில்**

**காண்பதும் எனையே..**

**தருபவனும் நானே...**

**பெறுபவனும் நானே...**



**நான் எங்கும் எதிலும் இருக்கிறேன்...**

**என் தரிசனம் பெறக் கண் தேவையில்லை..**

**மனதுதான் வேண்டும்...”**

' அப்போ உனைப் பார்க்க

மலை ஏற வேண்டாம் என்கிறாயா??'..

குழப்பத்துடன் கேட்டேன்..

**“தாராளமாக ஏறி வா...**

**அது உன் விருப்பம்...**

**அங்கும் நான் இருக்கிறேன் என்றேனே..**

**அங்கு வந்தாலும் எனைப் பார்க்கலாம்..”**

'கடவுளே'...விழித்தேன்...

'எனக்குப் புரியவில்லை...'

**“புரிந்து கொள்வது அவ்வளவு கடினமல்ல...**

**உனக்காக மட்டுமே நீ வாழ்ந்தால்..**

**“ என்னைக் காண, நீ சிரமப்பட்டு**

**மலையேறி உச்சிக்கு வரவேண்டும்...**

**பிற உயிர்களுக்காகவும் வாழ்ந்தாய் என்றால்...**

**நீ இருக்குமிடத்திலேயே**

**எனைக் காண்பாய்.”**

புன்னகைத்தார் **கடவுள்**!”

வானவரும் தொழும் தில்லையில் இறைவனை கண்டதாக திருவாசகம் பாடுகிறது.

“அளவிலாப் பாவகத்தால் அமுக்கு உண்டு இங்கு அறிவுஇன்றி
விளைவு ஒன்றும் அறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்கு
அளவிலா ஆனந்தம் அளித்தென்னை ஆண்டானைக்
களவிலா வானவரும் தொழும்தில்லை கண்டேனே ” திரு.482

- அளவற்ற எண்ணங்களால் அழுத்தப்பட்ட,
- இன்னது செய்தால் இன்னது விளையும் என்ற அறிவு இல்லதாதவனாய்
- வெறுமனே கிடந்த என்னை,
- வஞ்சனை அற்ற எல்லை இல்லா இன்பத்தைத் தந்து ஆட்கொண்டவனை,
- வான உலகத்தவரும் வணங்கும் தில்லையில் கண்டேன்.

## தெய்வநிலை உணர்வோம் – வேதாத்திரியம்

“எங்கும் நிறைவாக இருக்கிறார் கடவுளென்பீர்!இங்குநம்
உடல்உள்ளத்தது உறைந்தும் இருப்பாரன்றோ?
அங்கங்கே போய்த்தேடி அலைவானேன்? அவர்க்காக
தங்கநம் உயிர்க்குயிராம் தவநிலையில் அவரே நாம்!
(ஞாக.பா.1123)

வேதாத்திரிய திருவாசக சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம் வாழ்க வளமுடன்.

# 9.அகத்தவப் பயன்கள்

சுவாமி விவேகானந்தரும் அவரது சகோதரத் துறவிகளும் எதற்கு அவ்வளவு தவம் மேற் கொண்டார்கள்?

ஸ்ரீராமகிருஷ்ணர்தான் ஏற்கனவே அவர்களையெல்லாம் சித்தியடைந்த வர்களாக உயர்நிலைக்கு அழைத்துப் போய்விட்டாரே!

அப்படியிருந்தும், உணவு, தூக்கம் இவற்றையெல்லாம் துறந்து எதற்கு அவ்வளவு கடுமையான தவம் செய்தார்கள்?

கடவுளை அடைந்த பிறகும் அவர்கள் ஏன் தவம் செய்கிறார்கள் என்றால், தாம் பெற்ற இறையுணர்வைத் திடப்படுத்திக் கொள்வதற்காக என்பதுதான் பதில்.

புராணத்தில் படித்திருக்கிறோம், முசுகுந்த மகாராஜா இறையனுபவம் கிட்டிய பிறகும் தவம் மேற்கொண்டார் என்று. ஏன்?

அந்த உயர் அனுபவ நிலைக்குப் பிறகும் அவருக்கு மனம் அமைதியற்றுச் சலித்துக் கொண்டே இருந்தது. அதனாலேயே அவருக்கு, தவம் செய் என்ற ஆணை கிடைத்தது.

அலை பாய்வது மனதின் சுபாவம்; அதைத் தவத்தின் மூலம் அமைதிப்படுத்த முடியும்.இன்னொரு காரணம்.

இறையுணர்வை அனுபவத்தில் அடைந்த பின்னும் அதிலிருந்து சறுக்கி விழ வாய்ப்புண்டு. ஏன் தினமும் தியானம் செய்கிறீர்கள்? என்று ஸ்ரீராமகிருஷ்ணர், தமக்கு அத்வைத சாதனையைக் கற்றுத் தந்த குருவான தோதாபுரியைக் கேட்டார்.

அதற்கு தோதாபுரி, பாத்திரத்தைத் தினமும் துலக்க வேண்டும்; இல்லாவிட்டால் அதில் களிம்பு ஏறிக் கறுத்துவிடும் என்றார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் விடாமல், பாத்திரமாக இருந்தால்தானே தினம் தினம் துலக்க வேண்டும்? அதுவே தங்கமாகிவிட்டால் தினமும் துலக்க வேண்டியதில்லை அல்லவா? என்று கேட்டாராம்.

உண்மை என்னவெனில், எல்லோராலும் தங்கப் பாத்திரமாய் ஆகிவிட முடியாது. ஸ்ரீராம கிருஷ்ணர் ஓர் அவதார புருஷர்; அவர் சொக்கத் தங்கம்தான்.

எல்லோரையும் அவர் நிலைக்கு ஒப்பிட முடியுமா? ஸ்ரீராமகிருஷ்ணரைச் சரணடைந்தவர்கள் முக்தியடைவார்கள் என்பது உண்மைதான்.

இதுபற்றி அன்னை ஸ்ரீசாரதாதேவி ஒரு சாதுவிடம் விளக்குகையில், கடைசி மூச்சை விடுகையில், குருதேவர் வந்து அழைத்துப் போவார் என்பதில் ஐயமில்லை;

ஆனால், நீ உயிரோடிருக்கும்போதே, சாந்தியில் நிலைபெற்று இருக்க வேண்டுமானால், தவம் செய்ய வேண்டும்; குருதேவரைத் தியானிக் கத்தான் வேண்டும் என அறிவுறுத்தினார்.

பொதுவாக, தவம் செய்பவனுக்கே இறைவனின் கருணை கிட்டுகிறது. தவத்தின் மூலம் மனம் தூய்மையாகிறது; அதன் மூலம் கடவுளின் கருணைக்குப் பாத்திரமாவது எளிதாகிறது.

அதே சமயம், கடவுளின் கருணை கிட்டுவதற்கு எந்தச் சட்டதிட்டமும் கிடையாது என்பதும் உண்மையே. அவர்

நியதிகளுக்கு அப்பாற்பட்டவர்; அருளுவதும் அருளாதிருப்பதும் அவரது விருப்பம்.

அப்படியென்றால் என்னதான் வழி? செய்தால் அவரை வளைத்துப் போட்டு விட முடியும் என்ற கணக்கு ஏதும் போடாமல், தவம் செய்ய வேண்டும்.அப்படியானால், வாழ்நாள் பூராவும் ஒருவன் தவம் செய்து கொண்டே இருக்க வேண்டுமா?

படகோட்டி, பயண தூரம் முழுவதும் துடுப்பு போட்டுக் கொண்டே இருக்க வேண்டியதுதானா? அப்படியல்ல.

அலை அதிகமாகப் பொங்குகையில், காற்று வேகமாகச் சுழன்றடிக்கையில், படகோட்டி துடுப்பைக் கவனமாகப் போடத்தான் வேண்டும்.

சற்று நேரம் பொறுத்து, கடல் அமைதியாகும்; காற்று சாதகமாய் வீசும். அப்போது, படகோட்டி பாய்மரத்தைச் சரியாகக் கட்டிவிட்டு அமைதியாக உட்கார்ந்து கொண்டு புகைபிடிக்கிறான்.

படகு, தானே ஒழுங்காகப் பயணிக்கிறது. இப்போது படகோட்டிக்கு, ஓய்வு, அமைதி, ஆனந்தம்தான்.

அதுபோலவே ஒரு சாதகன், மனதின் கொந்தளிப்புகளையும், ஆசாபாசங்களையும் சமாளிக்கக் கடுந்தவம் செய்கிறான்;

மனம் அமைதியாகும்போது தவமும் முடிவுக்கு வருகிறது. ஸ்ரீராமகிருஷ்ணர் ஓர் அவதாரபுருஷராக இருந்தும், அவரே எத்தனை தவம் செய்தார்! எத்தனை வித ஆன்மிகச் சாதனைகள், எத்தனை பஜனை!

சாதுசங்கத்தின் அவசியத்தைத் திரும்பத் திரும்ப உபதேசித்த அவர், தாமே சாதுக்களையும் உருவாக்கித் தந்தார். தன் அந்தரங்கச் சீடர்களைப் பூரணத்துவம் அடைந்தவர்களாக ஆக்கித் தந்தார்.

இறைவனை உருவமுள்ளவராகவும் உருவமற்றவராகவும் காணும் அனுபவத்தை அவர்களுக்கு வழங்கினார்.

அப்படியிருந்தும், அவர்களை இப்படி கடும் தவத்துக்கு ஏன் உட்படுத்தினார் என்றால், அதற்கு மற்றொரு முக்கிய காரணம், அடுத்தவர்களுக்கு முன்மாதிரியாக அவர்கள் இருக்க வேண்டும் என்பதால்தான்.

அவர்களைப் பார்த்துத்தான் பிறரும் சாதனையும் தவமும் செய்யக் கற்றுக் கொள்வார்கள். குருதேவரின் மறைவுக்குப் பிறகு, தனித்து விடப்பட்ட அந்த இளம் சாதுக்கள், பாராநகர் மடத்தில் எத்தகைய விவேக வைராக்கியத்தோடு தவம் மேற்கொண்டார்கள் என்பதைக் கண்கூடாகப் பார்த்திருக்கிறேனே.

அவர்கள் இடுப்பில் கோவணம் மட்டும்தான் இருந்தது. நாள் முழுவதும் ஜபத்திலும் தியானத்திலும் மூழ்கிக் கிடப்பார்கள்.

உடம்பைப் பற்றியோ, உணவைப் பற்றியோ கவலையே படமாட்டார்கள். சில நாட்கள் தொடர்ந்து உண்ண ஒன்றுமே இருக்காது.

அவர்களிடம் மொத்தத்தில் உருப்படியாய் இருந்தது ஒரு வேஷ்டியும் ஒரு துண்டும்தான்.

அவர்களில் யாருக்கு வெளியே போகும் வேலை இருக்கிறதோ, அவர்கள் அதை உடுத்திக் கொண்டு போய் வருவார்கள். அவர்கள் உலகுக்கே உபதேசிக்கப் பிறந்தவர்கள்.

ஒரு முறை கண்டவர்கள் என்ற தகுதி அதற்குப் போதாது. பிரம்மஞானத்தில் நிலைபெற்றவர்களாக அவர்கள் உறுதி பெற வேண்டியிருந்தது.

அதற்குத்தான் இத்தனை கடின தவம். ப்ரம்மாஸ்மி (நான் பிரம்மமாக இருக்கின்றேன் என்றோ கல்வி த ம் பிரம்மா (இருப்பதெல்லாம் பிரம்மம் ஒன்றே) என்றோ, வெறுமனே

கிளிப்பிள்ளைபோல் வாயால் சொல்லாமல், அதை அனுபவப் பூர்வமாக, எல்லாவற்றிலும் இறைவனைக் கண்டு வணங்கும் நிலையைப் பெறுவதற்குத்தான் இத்தனை கடினமான தவம்.

மொத்தத்தில், ஆரம்ப நிலையில் கடவுளை அடைவதற்குத் தவம் வேண்டியிருக்கிறது; அடுத்த நிலையில், அனுபூதியில் பெற்றதை நிலைத்த ஆனந்தமாக ஆக்கவும், தாம் பெற்ற ஆனந்தத்தை அடுத்தவர்களுக்கு வழங்கும் தகுதியைப் பெறவும் தவம் அவசியமாகிறது.

பாங்கினொடு பரிசு ஒன்றும் அறியாத நாயேனை
ஓங்கி உளத்து ஒளிவளர உலப்பிலா அன்பு அருளி
வாங்கிவினை மலம்அறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே." 483

- இறைவனை அடையும் முறையும் அதனால் உண்டாகும் பயனும்
- ஒரு சிறிதும் அறியாத நாய் போன்ற இழிந்த தன்மை உடைய என் உள்ளத்தில் ஞான ஒளி தழைக்குமாறு செய்து,
- முடிவில்லாத அன்பு செய்வதற்கு எனக்கு அருள் செய்து,
- எனது விளைகளைத் தான் ஏற்றுக் கொண்டு,
- மும்மலக் கட்டை அறுத்து,
- உயர்ந்த பேரருள் புரிந்தவனை,
- நான்கு வேதங்கள் முழங்குகின்ற தில்லை அம்பலத்தில் கண்டேன்.

## அகத்தவப் பயன்கள் – வேதாத்திரியம்

"அறிவதனைக் கருவினிலே இணைத்து தவம் ஆற்ற
 ஐம்புலன்கள் அமைதி பெ றும், அறுகுணமும் சீராம்.
அறிவுதன் விழிப்புநிலை பிறழாத தெளிவில்,
 ஐந்துபெரும் பழிச்செயல்கள் விளைய வழியேது?
அறிவுஉயிரில்அடங்கி அந்நிலையில் மேலும்,

ஆழ்ந்து ஒடுங்கித் துரியம் நிற்க முன்வினைகள் போமே.
அறிவு துரியாதீத நிலை நிற்க நிற்க,
ஆதியாம், மெய்பொருளாம், அறும்பிறவித் தொடரே" (ஞாக.பா.1489)

**வேதாத்திரிய திருவாசக சிந்தைனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம் வாழ்க வளமுடன்.**

## 10.ஐம்புல அறிவு

ஐம்புலன்களை உடையது நம் உடம்பு. 'மெய், வாய், கண், மூக்கு, செவி' என அந்த ஐம்புலன்கள் வகைப்படுத்தப் படுகின்றன. மெய் என்னும் உடலால் தொடு உணர்வை அறிகிறோம்.

வாயால் அறியப்படுவது சுவையுணர்வு. கண் ஒளியுணர்வை உடையது, கண், ஒளியாலேயே பார்வை பெறுகிறது, ஒளியற்ற இடத்தில் கண் இயங்காது. மூக்கு வாசனையை முகர்கிறது. செவி ஒலியைக் கேட்கிறது.

இந்த ஐம்புலன்களைப் பற்றியும் பேசுகிறது திருக்குறள்.

'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடு வாழ்வார்.' (குறள் எண் 6)

ஐம்பொறிகளால் ஏற்படும் ஆசைகளை விட்டுவிட்டு பொய்யில்லாத ஒழுக்க நெறியில் நிற்பவர்கள் நீண்ட ஆயுளைப் பெற்று வாழ்வார்கள்.

'உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து!' (குறள் எண் 24)

ஐம்பொறிகளாகிய யானைகளை அறிவு என்னும் அங்குசத்தால்

எவனொருவன் அடக்கி ஆள்கிறானோ அவன் விண்ணுலக நிலத்திற்கு விதை போன்றவன் ஆகிறான்.

'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்
என்றிவ்வைந்தின் வகை தெரிவான் கட்டே உலகு' (குறள் எண் 27)

சுவை, ஒளி, தொடு உணர்வு, ஓசை, வாசனை என்னும் ஐந்தின் வகைகளை ஆராய்ந்து அறிய வல்லவனின் வசப்பட்டது இவ்வுலகு. குழந்தைகளை அள்ளி அணைப்பதிலும் அவர்களை முத்தமிட்டுக் கொஞ்சுவதிலும் உடலுக்குத் தனி இன்பம் கிட்டுகிறது என்கிறார் வள்ளுவர்:

'மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு! (குறள் எண் 65)

காமத்துப் பாலில், உடல் இன்பம் பற்றிய கற்பனையில், தாம் நீதிநூல் ஆசிரியர் மட்டுமல்ல, கவிஞரும் கூட என்பதைப் புலப்படுத்துகிறார். தலைவியின் தோள், அமிழ்தத்தால் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும் என எண்ணுகிறானாம் தலைவன். ஏனென்றால் அவள் தோளைத் தழுவும் போதெல்லாம் அவன் உயிர் புதிதாய்த் தளிர்க்கிறதாம்.

'உறுதோறும் உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்!'

'கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள' (குறள் எண் 1101)

ஐம்புலன்களுக்கும் இன்பம் தரும் ஆற்றல் பெண்ணிடம் மட்டுமே உண்டு என்கிறது வள்ளுவம். உடம்புக்கும் உயிருக்கும் இடையே உள்ள தொடர்பானது முட்டை ஓட்டிற்கும் அதன் உள்ளே உள்ள பறவைக் குஞ்சிற்கும் இடையே உள்ள தொடர்பைப் போன்றது என்பதும் வள்ளுவம் சொல்லும் கருத்து.

முட்டை ஓட்டை உடைத்துக் கொண்டு பறவைக் குஞ்சு பறப்பதைப் போன்றுதான் உடலை விட்டு உயிர் பிரிகிறது என்கிறார் வள்ளுவர்.

`உடல் அழியக் கூடியது, ஆனால் ஆன்மா அழிவில்லாதது’ என்ற நம் பாரம்பரிய ஆன்மிகக் கருத்து இந்தக் குறளால் உறுதிப்படுத்துவதைப் பார்க்கிறோம்.

'குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு.' (குறள் எண் 338)

தலைவிக்கும் தலைவனுக்கும் இடையே உள்ள தொடர்பானது உடம்புக்கும் உயிருக்கும் இடையே உள்ள தொடர்பைப் போன்றது என்கிறார். ஒன்றை விட்டு ஒன்று வாழாது என்பதைச் சொல்லாமல் சொல்கிறார்.

'உடம்போடு உயிரிடை அன்ன மற்றன்ன
மடந்தையோடு எம்மிடை நட்பு.’ (குறள் எண் 1132)

ஆன்மிகத்தில், மனிதனை வெளிப்புறத்தில் அலைய விடாமல் உள்நோக்கி இழுப்பதற்காக ஐம்புலன்களையும் ஈர்க்கும் வகையில் பூஜை நெறிகள் அமைந்துள்ளன. கண்ணால் தெய்வச் சிலையைக் 'காண்கிறோம்’. காதுகளால் அவன் நாமங்களைக் 'கேட்கிறோம்’. ஊதுவத்தி, சாம்பிராணி போன்றவற்றைக் காட்டி அந்த இனிய நறுமணத்தை 'முகர்கிறோம்’. மலர்களால் இறைவனை வழிபடுவது, கண்ணாலும் நாசியாலும் ஏற்படும் அனுபவத்திற்காகத்தான்.

திருநீறு, குங்குமம், சந்தனம் போன்றவற்றைத் தொட்டு இட்டுக் கொள்வதால் 'தொடு உணர்வாலும்’ஆன்மிகத்தில் தோய்கிறோம். மலர்களையும் தொட்டுத் தானே அர்ச்சிக்கிறோம்! பிரசாதமாகத் தருவதை 'உண்டு’ நிறைவடைகிறோம்.

மனிதனின் ஐம்புலன்களையும் முழுமையாக ஆன்மிகத்தில் பழக்கப்படுத்துவதற்காகவே இத்தகைய முறைகள் அனுசரிக்கப்படுகின்றன.

"பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமில்லாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்து ஆண்ட கிளர் ஒளியை மரகதத்தை
வேதங்கள் தொழுது ஏத்தும் விளங்குதில்லை கண்டேனே." 484

- ஐம்பூதங்களாகவும் ஐம்பொறிகளின் வழி அறியப்படும் ஐம்புல அறிவாகவும்,
- எல்லாப்பொருள்களாகவும், வேறுபாடுகள் அனைத்துக்கும் காரணமாகவும், தனது இயல்பில் மாறாத தன்மை உடையவனாகவும்,
- எனது துன்பங்களைத் தொலைத்து ஆட்கொண்ட தானே ஒளிரும் ஒளியானவனாகவும்,
- மரகத மணி போன்றவனாகவும் (உமா தேவியின் நிறம்), விளங்குபவனை.
- வேதங்கள் வணங்கிப் போற்றும் விளங்குகின்ற தில்லையில் கண்டேன்.

## புலன் மயக்கமும் உண்மை உணர்வும் – வேதாத்திரியம்

"புலனுணர்வு அனுபவங்கள் நாம் தொடர்பு கொள்ளும்
பொருட்களிலே இருந்தெவர்க்கும் வருவதில்லை. இல்லை!
புலன்தொடர்பு கொள்பொருட்கள் தோற்றம்தன்மைக் கேற்பப்
புதிரான சீவகாந்தம் தன்மாற்றம்அடையும்.
புலன்மூலம் நிழல்விண்ணாம் சPவகாந்த மாற்றம்,
பொருந்தும் கணக்குக்கேற்ப, இன்பம்துன்பம் நல்கும்.
புலன்தொடரும் பொருட்கள், சீவ காந்தத்தைத் தூண்டும்.
புலன்வழியே மனம்உணரும் அனைத்தும் காந்தக்கூத்து!
(ஞாக.பா.1755)

வேதாத்திரிய திருவாசக சிந்தைனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம் வாழ்க வளமுடன்.

## வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்ட பத்து

## YOUTUBE LINKS

11. சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி https://youtu.be/ZoBZv_iAjoM
12. பிறவாமை தந்த இறைவன் https://youtu.be/pV_gVhAt67c
13. உள்ளம் பெருங்கோயில் https://youtu.be/R2NM-Ngwswo
14. ஞானம் பெற என்ன செய்ய வேண்டும்? https://youtu.be/UANcgyX7ZCw
15. சாதிகுலம் பிறப்பென்னும் https://youtu.be/CTuY4E4Q5Y8
16. பிறப்பென்னும் பேதைமை நீங்க https://youtu.be/1-n7Qw-QFo4
17. சித்தமெனும் திண்கயிற்றால் https://youtu.be/sFB_Tf3_Zxw
18. **கடவுளைக் காண முடியுமா? https://youtu.be/gS-urEMg0us**
19. அகத்தவப் பயன்கள் https://youtu.be/l4K9mSJx3Cg
20. ஐம்புல அறிவு https://youtu.be/t0-xm0AxA3M

## துணைநின்ற நூல்கள்.


1. திருவாசகம், சுவாமி சித்பவனாந்தர், திருப்பராய்த்துறை.
2. திருவாசகம், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
3. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
4. இணையதள தகவல்கள்.
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
6. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.
7. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை

8. ராமகிருஷ்ணரின் அமுத மொழிகள், ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை
9. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள், மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
10. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.

# பானுகுமார் படைப்புலகம்

(145 புத்தகங்கள்)

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்

5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே

## திருவாசகமும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்

27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

## vethathiriam Banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்களை அடியிற்கண்ட 119 தலைப்புகளில் vethathiriam Banukumar vஎன்ற யூடியூப் சேனலில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து

21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்

56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்டோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு

91.பொதுவானவை
92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்
99.பட்டினத்தார் ஒப்பாய்வு
100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔவையார் சிந்தனைகள்
102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107. Retirement Speech
108. Audio speech part 1
109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
118.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
119. மனவளக்கலையில் வாசி யோகமா?